சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 30.10.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 57/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-2 |
| சாட்சியின் பெயர் | : | பாஸ்கரன் |
| தந்தை பெயர் | : | காசிநாதன் |
| கிராமம் | : | கடுவங்குடி |
| தாலுக்கா | : | நன்னிலம் |
| தொழில் | : | கூலி வேலை |
| வயது | : | 50 |

2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 30 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1, 4, 6 எதிரிகள் ஆஜர். 3 ம் எதிரி வேறு ஒரு வழக்கில் மதுரை மத்திய சிறையில் உள்ள காரணத்தினால் அவரை ஆஜர் செய்ய P.T Warrant பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் போதிய காவலர்கள் இல்லாத காரணத்தினால் வீடியோ கான்பிரென்ஸ் மூலம் ஆஜர் படுத்துவதாக வேண்டுகோள் கடிதம் கொடுத்ததன் அடிப்படையில் இன்று மேற்படி 3 ம் எதிரி வீடியோ கான்பிரென்ஸ் மூலம் ஆஜர் படுத்தப்பட்டுள்ளார். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். நான் இந்து பறையன் சமூகத்தை சேர்ந்தவன் ஆவேன். இவ்வழக்கில் பாதிக்கப்பட்டதாக சொல்லக்கூடிய சாமிநாதன் என்பவரையும், பக்கிரிசாமி என்பவரையும் எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக என்ன விவரம் தெரியும் என்றால் எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இந்த சாட்சி குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்பது போல் இந்த சாட்சியிடம் கேள்விகள் கேட்க அனுமதிக்கவேண்டுமென அரசு தரப்பு வழக்கறிஞர் வாய்மொழியாக கேட்டுகொண்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.)

<u>அரசு தரப்பு தொடர் விசாரணை</u>

கடந்த 10.07.2011 ம் தேதி மாலை சுமார் 6.30 மணிக்கு நான் வீட்டில் இருக்கும்போது தங்கவேல் மகன் பக்கிரிசாமி என்பவர் என்னை கூப்பிட்டு அவர் தம்பி சாமிநாதன் என்பவரை M.C. செல்வம் கூப்பிடுவதாக கடுவங்குடியை சேர்ந்த அன்பழகன் மகன் அப்பு, வள்ளங்கிளியை சேந்த ராஜா என்பவர் சொன்னார் என்றும், அவர்களின் மீது சந்தேகமாக உள்ளது என்றும், நீ ஓர் ஆளை அழைத்துக்கொண்டு பின்னால் போய் கவனித்துக்கொள் என்றும், அவருடைய T.V.S 50 இருசக்கர வாகனத்தை கொடுத்தார் என்றும், நான் மெயின் ரோட்டில் நின்ற நாடாக்குடி கலைவாசன் என்பவரை இருசக்கர வாகனத்தில் ஏற்றிக்கொண்டு சுமார் 150, 200 அடி தூரத்தில் பின்தொடர்ந்து அவர்களுக்கு தெரியாமல் போனோம் என்றும், இரவு சுமார் 7.00 மணி இருக்கும் போது கடுவங்குடி 1ம் எதிரி செல்வம் (எ) சித்திரைசெல்வம் வீட்டிற்கு முன்பு சாமிநாதனை இறக்கிவிட்டதும், இந்த பயல இனிமேலுக்கு விடக்கூடாது வெட்டுங்கடா என்றும், 1ம் எதிரி செல்வம் (எ) சித்திரைசெல்வம் அருவாளை எடுத்துக்கொண்டு விரட்டும் போது ராஜா (எ) இளஞ்செழியன் மற்றும் 6ம் எதிரி அப்பு (எ) கார்த்திக் செல்வம் வீட்டில் இருந்து அருவாள் கத்தியுடன் ஓடிபோய் சாமிநாதனை சின்ன குஞ்சி வீட்டின் எதிரே சுற்றிவளைத்துக் கொண்டு

சாமிநாதனை அருவாளால் வலது பக்க தலையிலும், வலது முழங்கை முட்டிக்கு கீழும், வலது புறங்கையிலும், முன் நெற்றியிலும் மாறி மாறி வெட்டினார் என்றும், ராஜா (எ) இளஞ்செழியன் என்பவர் அருவாளால் சாமிநாதனை மாறி மாறி வெட்டியதில் இடது முழங்கையின் கீழும், இடது முன்கை பின்புறமும், இடது பக்க தலையின் பின்புறம் வெட்டுக்காயம் பட்டு கீழே விழுந்துவிட்டார் என்றும், அப்போது பக்கத்தில் நின்ற 6 ம் எதிரி அப்பு என்கிற கார்த்திக் கத்தியால் சாமிநாதன் கழுத்தை அறுத்துவிட்டார் என்றும், நானும் கலைசெல்வனும் வெட்டாதிங்க வெட்டாதிங்க என்று சத்தம் போடும் போது சாமிநாதனை வெட்டிய மூன்று நபர்களும் மேற்கு பக்கமாக ஓடிவிட்டார்கள் என்றும், நான் உடனே சாமிநாதன் அண்ணன் பக்கிரிசாமிக்கு தகவல் சொன்னேன் என்றும், கொஞ்ச நேரத்தில் பக்கிரிசாமி வந்ததும் நானும் கலைசெல்வனும் பக்கிரிசாமியுடன் கிட்போய் பார்க்கும் போது சாமிநாதன் இறந்துபோய் கிடந்தார் என்றும், பின்னர் பக்கிரிசாமி பேரளம் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க ஊர்காரர்களுடன் சேர்ந்து போனார் என்றும், 11.07.2011 ம் தேதி திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பிரேத கிடங்கில் வைத்து பிரேத விசாரணை செய்யும் போது நடந்த விவரம் சொன்னேன் என்றும், சொன்னால் சரயில்ல. மேலும் நன்னிலம் காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரணை செய்தார்கள் விவரம் சொன்னேன்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M
Digitally signed by VADIVEL M
Date: 2025.10.30 17:05:23 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.